


Registered as Newspaper

THE SUDAR OLI

# சுடர் ஒளி

24.05.2020 ஞாயிற்றுக்கிழமை

## கொரோனா 1,117

கொழும்பு, மே 24
கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான 23 பேர் இன்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. நாட்டில் கொரோனா தொற்று அடையாளம் காணப் பட்ட நிலையில் மொத்த தொற்றாளர் 2

# ராஜபக்ச ஆட்சியில் தமிழரின் உரிமைகள் திட்டமிட்டு பறிப்பு

### முன்னாள் பிரதமர் ரணில் குற்றச்சாட்டு



கொழும்பு, மே 24
ராஜபக்சக்களின் கடந்த ஆட்சியிலும், இந்த ஆட்சியிலும் தமிழ் மக்களின் உரிமைகள் திட்டமிட்டு பறிக்கப்பட் டுள்ளன. இதனால் அந்த மக்களின் மனதை இந்த அரசு மேலும் நோக டித்து வருகின்றது. அத்துடன், தமிழ் மக்கள் மத்தியில் இந்த அரசு மீதான அதிருப்திநிலையும் தொடர்ந்து கொண்டே செல்கின்றது.
இவ்வாறு முன்னாள் பிரதமரான ஐக்கிய தேசியக் கட்சியின் தலை 2



## கிடங்கில் வீழ்ந்த சிறுவன் உயிரிழப்பு

வவுனியா, மே 24
கல்குவாரியில் வீழ்ந்து சிறுவனொருவன் உயிரிழந்துள்ளான். இந்த துயரச் சம்பவம் வவுனியா கற்குளத்தில் இன்று நடந்துள்ளது. வவுனியா கற்குளம் பகுதியில் அமைந்துள்ள கற்குவாரி பகுதிக்குச் சென்ற சிறுவன், நீர் நிறைந்த கிடங்கில் வீழ்ந் துள்ளான். சம்பவத்தில் அதே பகுதியைச் சேர்ந்த 7 வயதான சிறு வனே உயிரிழந் துள்ளான். சிறுவ 2

# ஊரடங்கு தளர்ந்தாலும் அபாயம் நீங்கவில்லை!

### அவதானத்துடன் செயற்படுமாறு தொற்று நோயியல் பிரிவு அறிவுரை

கொழும்பு, மே 24
ஊரடங்குச் சட்ட நடைமுறையில் தளர்வுகள் மேற்கொள்ளப்பட் டுள்ள நிலையில், கொரோனா வைரஸ் தொடர்பாக மிகவும் அவதானத்துடன் இருக்கவேண்டும் எனத் தொற்று நோயி யல் விஞ்ஞானப்பிரிவு பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது. 2

## விசாரிக்கச் சென்ற பொலிஸார் மீது கீரிமலையில் தாக்குதல்!

யாழ்ப்பாணம், மே 24
இரண்டு குடும்பங்களுக்கு இடை யில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தை தடுக் கச் சென்ற பொலிஸார் மீது தாக்குதல் நடத்தப்பட் டுள்ளது. இந்தச் சம்பவம் கீரிமலையில் நேற்று இரவு நடந்துள்ளது. விசாரணை மேற்கொள்ளச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மீதே கூரிய ஆயுதத் தால் தாக்குதல் நடத்தப் பட்டுள்ளது. அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். 2

## புதினம் தெரியுமோ?

அரசியலில் “பல்டி” என்பது சர்வ சாதாரணம் தான். தமிழ் அரசியல் வாதி ஒருவரின் “அந்தர் பல்டி” தொடர்பாக தகவல்கள் கசிந்துள் ளன. சபை ஒன்றின் “மேலான” பதவியில் இருந்த இளம் அரசியல் வாதி ஒருவர் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்த லில் களமிறங்குகின்றார். 2

## ஒரு குழந்தைக்கே “கவாசாகி” அறிகுறி

கொழும்பு, மே 24
'கவாசாகி' நோயின் அறிகுறிகளுடன் ஒரு குழந்தை மாத்திரமே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளது என்று லேடி ரிட்ஜ்வே மருத்துவமனையின் சிறுவர் மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்தார்.
'கவாசாகி' நோயின் அறிகுறிகளை உடைய பல சிறுவர்கள், லேடி ரிட்ஜ்வே மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று சமூக 2

# திறக்கப்படுகின்றன மாகாணங்கள்

### 26 முதல் போக்குவரத்துக்கு அனுமதி

யாழ்ப்பாணம், மே 24
நாட்டில் ஏற்பட்ட கொரோனா தொற்றை அடுத்து நிறுத்தப்பட்டி ருந்த மாகாணங்களுக்கு இடையி லான போக்குவரத்து, நாளை மறு தினம் செவ்வாய்க்கிழமை மீள ஆரம்பிக்கப்படுகின்றது.
கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்கள் தவிர்த்து ஏனைய மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து சேவைகள் ஆரம் பிக்கப்படவுள்ளது என்று ஜனாதி பதி செயலகத்தால் அறிவிக்கப் பட்டுள்ளது.
அதிகாலை 4.30 மணி முதல் மாலை 6 மணி வரையில் சுகா தார ஆலோசனைகளுக்கு உட்பட்டு போக்குவரத்து 2A

## 24 மணி நேரத்தில் 515 பேர் கைது!

கொழும்பு, மே 24
ஊரடங்குச் சட்டத்தை மீறி னர் என கடந்த 24 மணி நேரத் தில் 515 பேர் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் கைதுசெய் யப்பட்டுள்ளனர். 152 வாகனங் களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.
கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி முதல் ஊர 2

## கொரோனா

களின் எண்ணிக்கை ஆயிரத்து 117 ஆக அதிகரித்துள்ளது. இதேவேளை, இதுவரை கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான 434 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுகின்றனர். தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் 97 பேர் மருத்துவமனைக் கண்காணிப்பில் உள்ளனர். இதேவேளை இன்று மேலும் 14 பேர் குணமடைந்துள்ள நிலையில் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து குணம டைந்தோரின் மொத்த எண்ணிக்கை 674 ஆக அதிகரித்துள்ளது. (எ)

## கிடங்கில்...

னின் சடலம் வவுனியா பொது மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இறப்புத் தொடர்பான விசாரணையை சிதம்பரபுரம் மற்றும் வவுனியா பொலிஸார் இணைந்து மேற் கொண்டு வருகின்றனர். (க-110)

## புதினம் தெரியுமோ?

அதற்காக அவர் அந்த "மேலான" பதவியிலிருந்தும் விருப்பமின்றி விலகியிருந்தார். இந்த அரசியல்வாதி நாடாளுமன்றத் தேர்தலில் களமிறங்கிய விதமும் சுவாரசியமானது. இவரை நாடாளுமன்றத் தேர்தலில் களமிறங்க அவரது கட்சியிலுள்ள பலருக்கே விருப்பம் இல்லாதிருந்தபோது, அரசியல்வாதி ஒருவரின் பக்கபலத்தால் வேட்பாளர் பட்டியலில் இவரது பெயர் புகுத்தப்பட்டிருந்தது. வேட்பாளர் பட்டியல் தயாரிப்பின் போது இறுதி நேரத்தில் செருகப்பட்டிருந்தது இவரது பெயர். இவருக்குப் பக்கபலமாகச் செயற்பட்ட அந்த அரசியல்வாதி தனது ஆதரவாளர்கள் பலரை நாசுக்காக வெட்டிவிட்டு இவரது பெயரைப் புகுத்தியிருந்தார். இவரைச் சபையின் "மேலான" பதவிக்கு நியமித்ததிலும் அவரது பங்கு பெரியது. இவர் அவரது ஆள் என்று கட்சியினரே பேசிக் கொள்ளுமளவு இருந்தது இருவரது உறவும். இவருக்குப் பக்கபலமாக இருந்த அரசியல்வாதி அண்மையில் தமிழ் மக்களின் உணர்வுகளைச் சீண்டும் விதமாகக் கருத்துக் கூறி பலரின் எதிரிப்புக்களைச் சம்பாதித்துக் கொண்டார். அவரது கட்சிக்குள்ளும் அவருக்கு எதிராகப் பலத்த எதிர்ப்புகள் கிளம்பிவிட்டன. இதையெல்லாம் கவனித்த இளம் அரசியல்வாதி அடித்தார் ஒரு "அந்தர் பல்டி". தனக்கு இத்தனை நாளும் பக்கபலமாக இருந்த அந்த அரசில்வாதிக்கு எதிராகத் திரும்பிய அவர், அறிக்கைகளையும் விட்டார். இப்போது அவர் இரகசியமாக கட்சி ஆதரவாளர்களைச் சந்தித்து, அந்த அரசியல்வாதிக்கும் தனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று கூறுவதோடு, அதையெல்லாம் மனதில் வைத்துத் தனக்கு வாக்கிடாமல் இருக்கக் கூடாது என்றும் கேட்கிறாராம். முன்னாள் போராளிகளையும் சந்தித்து, தனக்கு ஆதரவு தர வேண்டும் என்று கேட்டாராம். இதைய நிந்த வாயைக் கொடுத்து வாங்கிக் கட்டிய அரசியல்வாதியின் ஆதரவாளர்கள் கொதித்துப் போயுள்ளார்களாம். தமிழ் மக்களின் உணர்வுகளைச் சீண்டும் விதமாகத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்ததால் கோபமடைந்து, அவர் இந்த முடிவுகளை எடுத்திருந்தால் வரவேற்கத்தக்கதே. ஆனால் இது வாக்குத் தேடும் யுக்தியோ என்ற சந்தேகமும் இல்லாமல் இல்லை. அந்த அரசியல்வாதி கூறிய கருத்தால் எழுந்துள்ள எதிர்ப்புகளைச் சமாளித்து, வாக்குகளைத் தங்கள் அணிக்கே பெற்றுக்கொள்ளும் யுக்தியாகக்கூட இருக்கலாம் என்கின்றனர் கட்சியின் ஒரு சாரார். பொறுத்திருந்து பார்க்கலாம். உண்மையான மாற்றமா என்பதை காலம் வெளிக்காட்டும். அப்போது மக்கள் தக்கவாறு பதில் கொடுப்பார்கள்தானே.

# ராஜபக்ச ஆட்சியில் தமிழரின்...

வர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். இறுதிப் போரில் உயிரிழந்த தமிழ் உறவுகளை நினைவுகூரும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் உட்பட சகல நினைவேந்தல்களையும் கடந்த நல்லாட்சி அரசில் தமிழ் மக்கள் எந்தத் தடையும் இன்றி சுதந்திரமாக பகிரங்கமாக நினைவு கூர்ந்து வந்தனர். ஆனால், இம்முறை மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வைப் பகிரங்கமாக அனுஷ்டிக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான அரசும் அதன் படைகளும் பல்வேறு இடங்களில் தடைகளை ஏற்படுத்தி ருந்தன. இது தொடர்பில் கடந்த நல்லாட்சி அரசில் பிரதமராகப் பதவி வகித்த ஐ.தே.கவின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் ஊடகவியலாளர்களால் முன்வைக்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

போரின்போது உயிரிழந்த தமது உறவுகளை நினைவுகூர்வது மக்களின் ஜனநாயக உரிமை. இதை எவரும் தடுத்து நிறுத்த முடியாது. எமது ஆட்சியில் வடக்கு, கிழக்கில் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு எந்தத் தடையையும் நாம் விதிக்கவில்லை. அதனால் அங்குள்ள தமிழ் மக்கள் நினைவேந்தல் நிகழ்வுகளை அமைதியாக நடத்தினார்கள். இதேவேளை, எமது ஆட்சியில் 'போர் வெற்றி விழா' என்ற பெயரில் நாம் எந்த நிகழ்வையும் நடத்தவில்லை. ஆனால், இந்த அரசு தேசிய படைவீரர்கள் தினத்தை 'போர் வெற்றி விழா' என்ற பெயரில் நடத்தியுள்ளது. இந்த அரசு முன்னைய ஆட்சியிலும் இதே பெயரில் இந்த விழாவை நடத்தியிருந்தது. எமது ஆட்சியில் மே 19ஆம் திகதியை 'தேசிய படைவீரர்கள் தினம்' என்றே நாம் பிரகடனப்படுத்தி அன்றைய நாளை அமைதியான நிகழ்வுடன் நடத்தினோம்.

ஏனெனில், உள்நாட்டுப் போரில் உயிரிழந்தவர்கள் அனைவரும் இலங்கையர்களாவர். இந்தநிலையில், போரால் பாதிக்கப்பட்டவர்களின் மனதைப் புண்படுத்தக் கூடாது என்பதற்காக 'போர் வெற்றி விழா' என்ற பெயரில் எந்த நிகழ்வையும் நாம் நடத்தவில்லை. தற்போது ஆட்சியிலுள்ள ராஜபக்ச அரசு, நல்லாட்சியில் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்ட உரிமைகளையும் பறித்துள்ளது. இந்த அரசு கடந்த ஆட்சியிலும் இதையே செய்தது. இந்த ஆட்சியிலும் திரும்பவும் அதையே செய்கின்றது. மூவின மக்களுக்கும் சம உரிமைகள் வழங்கப்பட வேண்டும். இதில் நான் பெரிது; நீ சிறிது என்ற வேற்றுமை இருக்கக்கூடாது. அப்போதுதான் நாட்டில் நல்லிணக்கம் ஏற்படும். ஆனால், ராஜபக்ச ஆட்சியில் நல்லிணக்கம் ஏற்படுவது கேள்விக்குறியே- என்றார். (எ-22)


## ஊரடங்கு....

இலங்கையில் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு வெற்றிகரமாக நடவடிக்கை எடுத்துள்ளபோதும் சமூகத்தில் கொரோனா வைரஸ் நோயாளர்கள் இல்லை என்ற உறுதியை வழங்குவதற்கு மேலும் சில காலம் எடுக்கும் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.
கொரோனா தொற்றுப்பரவல் வெற்றிகரமாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளபோதும் சமூகத்தில் கொரோனா நோயாளர்கள் இல்லை என்று உறுதிப்படுத்த முடியாது என தொற்று நோயியல் விஞ்ஞானப் பிரிவின் விசேட வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.
கொரோனா நோயாளர் ஒருவர் இருந்தாலும் அவர் மூலமாக பலருக்கு நோய்த் தொற்று ஏற்படும் நிலை உள்ளது. கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும்போது மீண்டும் அனைவரும் தங்களின் கடமைகளுக்கு திரும்புவதுடன், மக்கள் ஒன்றுகூடுவது அதிகரிக்கும்.
நாட்டில் கட்டுப்பாட்டு நிலை தளர்த்தப்பட்டுள்ளபோதும் கைகளை கழுவுதல், சனநெரிசல் மிக்க பகுதிகளில் முகக் கவசங்களை அணிதல் மற்றும் சமூக இடைவெளியை பேணுதல் என்பன கட்டாயமாக மேற்கொள்ளப்படவேண்டும் என விசேட வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார். (எ)

## ஒரு குழந்தைக்கே

வலைத்தளங்களில் பரவலாக செய்திகள் வெளியாகியுள்ளன. இந்த செய்தியின் உண்மை தன்மை பற்றி உறுதிப்படுத்திய மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா மேலும் தெரிவித்துள்ளதாவது,
'கவாசாகி' நோயின் அறிகுறிகளை உடைய பல சிறுவர்கள், லேடி ரிட்ஜ்வே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. எனினும் இதுவரை ஒரு குழந்தை மாத்திரமே அவ்வாறான நோய் அறிகுறிகளுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளது.
ஒவ்வொரு வருடமும் 1015 க்கும் மேற்பட்ட நோயாளர்கள் இந்த அறிகுறிகளுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுகின்றனர். அந்த அறிகுறிகள் கொவிட் 19 க்கு இணையான அறிகுறிகள் எனினும் இதுவரை பரிசோதிக்கப்பட்ட எவருக்கும் இந்தத் தொற்று காணப்படவில்லை- என்றார். (க)

## 24 மணி நேரத்தில்...



டங்குச் சட்டத்தை மீறிய 62 ஆயிரத்து 677 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர். 17 ஆயிரத்து 612 வாகனங்கள் கைப்பற்றப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளன.
ஊரடங்குச் சட்டம் மீறப்பட்டமை தொடர்பில் 19 ஆயிரத்து 586 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ள நிலையில், 7 ஆயிரத்து 661 பேருக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ப)

## விசாரிக்க சென்ற...

கீரிமலை புதிய கொலனி பிரதேசத்தில் இரண்டு குடும்பங்களுக்கிடையில் இருந்து வந்த பிரச்சினை வலுவடைந்து வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. வாய்த்தர்க்கம் மேலும் வலுவடைந்து இரண்டு குழுக்களுக்கிடையில் மோதலாக உருவெடுக்கும் நிலைமை தோன்றிய காரணத்தால் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டிருந்தது.
அந்தப் பகுதி வீதி ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த சீருடை தரித்த பொலிஸாரும், சிவில் உடையில் உபபொலிஸ் பரிசோதகர் ஒருவரும், இன்னுமொரு பொலிஸ் உத்தியோகஸ்தரும் சென்றிருந்தனர். பொலிஸார் வருவதை அவதானித்த அங்கிருந்தவர்கள் சிதறி ஓடியுள்ளனர்.
அங்கு சென்ற பொலிஸார் தர்க்கம் இடம்பெற்றதாகக் கூறப்பட்ட வீட்டுக்குள் பிரவேசித்தபோது, அங்கிருந்த ஒருவர் உள்ளே சென்று உபபொலிஸ் பரிசோதகரை, தான் வைத்திருந்த கூரான ஆயுதம் ஒன்றால் அவரது வலது கையை வெட்டியுள்ளார். உபபொலிஸ் பரிசோதகர் தாக்குதலை தடுக்க முற்பட்டபோதும், தொடர்ந்தும் அவரைத் தாக்க முயற்சித்ததாகவும் கூறப்படுகிறது.
சம்பவத்தை அடுத்து பொலிஸார் மீது தாக்குதல் நடத்திய குறித்த நபர் உள்பட்ட இருவர் உடனடியாக கைது செய்யப்பட்டனர்.
தாக்குதல் மேற்கொள்ள பயன்படுத்திய கூரிய ஆயுதமும், அவரிடமிருந்து மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
தாக்குதலுக்கு இலக்காகியவர் 35 வயதுடைய தமிழ் உபபொலிஸ் பரிசோதகர் மு.உதயநந்தன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர் தற்போது தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். சம்பவம் இடம்பெற்ற பகுதி பொலிஸார் இராணுவத்தினரின் முற்றுகையுடன் பதற்றநிலையில் காணப்படுகிறது. காங்கேசன்துறை பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணை களை முன்னெடுத்து வருகின்றனர். (க-114)

# திறக்கப்படுகின்றன...

சேவைகள் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.
நாட்டின் நிலைமை கட்டம் கட்டமாக சீராகி வரும் நிலையில் நாளை மறுதினம் முதல் நாடு வழமைக்குத் திரும்பும் என்று எதிர்பார்க்கின்றேன். சுகாதார அமைச்சு முழுமையாக அறிவித்தால் போக்குவரத்து சேவை வழமைக்குத் திரும்பும் என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.
கடந்த காலங்களைப் போன்று அளவுக்கதிகமான பயணிகளை பஸ் மற்றும் ரயிலில் பயணிக்க அனுமதிக்க முடியாது. நிலைமை வழமைக்குத் திரும்பினாலும் சுகாதார விதிமுறைகளை பயணிகள் பின்பற்ற வேண்டியது கட்டாயமாகும். இதனைக் கண்காணிக்கும் பொறுப்பு போக்குவரத்துப் பொலிஸார் மற்றும் ரயில் நிலைய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.
நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் பயணிகளின் தேவைகள் தொடர்பாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு கணக்கெடுப்பு நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது.
அனைத்து மாவட்டங்கள், மாகாணங்களை உள்ளடக்கிச் சுமார் 2 ஆயிரம் பயணிகளிடம் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.
அதேவேளை, சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பாதுகாப்பான முறையில் போக்குவரத்து சேவைகள் மற்றும் ஏனைய சேவைகளைச் செயற்படுத்துவதற்குத் தீர்மானித்துள்ளோம் என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது யாழ்ப்பாண மாவட்டம் இயல்புநிலைக்குத் திரும்பியுள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. உள்ளூர் போக்குவரத்து சற்று அதிகரிக்க வேண்டிய சூழ்நிலை காணப்படுகின்றது. தனியார் போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டளவில் இடம்பெற்று வருகின்றது . அதிலும் சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படுவதோடு, அவை தொடர்ச்சியாகப் பின்பற்றப்படுகின்றதா என அவதானிக்க வேண்டிய தேவையும் உள்ளது.



தனியார் போக்குவரத்து சேவையில் நின்று பயணிகள் பயணம் செய்வது தொடர்பில் எமக்கு முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளது. இது தொடர்பில் நாங்கள் தனியார் போக்குவரத்து சபையினருடன் கலந்துரையாடவுள்ளோம். யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ளூர் பஸ் சேவைகளை அதிகரிப்பதற்கான வேலைத் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம்.
தீவுப் பகுதிக்கான போக்குவரத்தும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இடம்பெறுகின்றது. காற்றின் தாக்கம் காரணமாக சிறு தடங்கல் ஏற்பட்டுள்ள போதிலும், தீவுப்பகுதிக்கான போக்குவரத்துச் சேவையும் வழமைபோன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆலயங்கள் மற்றும் மக்கள் ஒன்று கூடுவதற்கான செயற்பாடுகள் தொடர்பில் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் எனவும் அறிவித்துள்ளோம். அதிலும் மத வழிபாட்டுத்தலங்கள் சுகாதார நடைமுறையைப் பின்பற்றி செயற்பட வேண்டும். என்று தெரிவித்தார். (எ-111)

# தனிமைப்படுத்தல் விதிகள் தொடரும்

## பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவிப்பு




கொழும்பு, மே 24
நாடளாவிய ரீதியில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டாலும், தனிமைப்படுத்தல் விதிகள் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும் என்று பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.
எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முதல் நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படவுள்ளதுடன், அன்று முதல் மறுஅறிவித்தல் வரை இரவு 10 மணி முதல் காலை 4 மணி வரையில் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே பிரதி பொலிஸ்மா அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
ஊரடங்கு சட்ட நடைமுறையில் தளர்வுகள் மேற்கொள்ளப்பட்டாலும் தனிமைப்படுத்தல் விதிகள் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும். மக்கள் நடமாட்டம் இடம்பெறும்போது சமூக இடைவெளி, கைகழுக்குதல் மற்றும் அரவணைத்தல் முதலானவற்றை தவிர்க்க வேண்டும்.
கைகளைச் சுத்தமாக வைத்திருத்தல் உள்ளிட்ட தனிமைப்படுத்தல் விதிமுறைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். நாடுமுழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வீதித்தடைகள் மதிய நேரங்களில் சில பகுதிகளில் தற்காலிகமாக அகற்றப்பட்டாலும் இரவு நேரங்களில் அவை வழமை போல செயற்படும் -என்றார். (எ)

# உடல்களை எரிக்க அறிவுறுத்தும் வர்த்தமானியை மீளப் பெறுக!

## முன்னாள் எம்.பி அலி ஸாஹிர் கோரிக்கை

கொழும்பு, மே 24
கொவிட் 19 வைரஸ் தொற்றினால் இறந்தவர்களது உடலங்கள் கட்டாயம் எரிக்கப்பட வேண்டும் என்ற வர்த்தமானி அறிவித்தலை மீளப்பெற வேண்டும் என ஜனாதிபதி மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோரிடம் முன்னாள் இராஜாங்க அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அலி ஸாஹிர் மௌலானா கோரிக்கை விடுத்துள்ளார்.
சமூக வலைத்தள பக்கமான டுவிட்டர் மூலம் அவர் இந்தக் கோரிக்கையை வெளியிட்டுள்ளார். அதில் மேலும் உள்ளாவது;
உரிய சுகாதார வழிமுறைகளின் ஊடாக சமூக இடைவெளியினைப் பேணியும் , ஜனநாயக அடிப்படையில் மக்களை ஒன்று திரட்டி வாக்குச் சேகரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளாது, நேரடியாக நோய் பரவக் கூடிய , நோயினை பரப்பக்கூடிய காவிகளான உயிருள்ளவர்களோடு தொடர்புபடுகின்ற வகையில் நாடாளுமன்றத் தேர்தலை முன்னச்சரிக்கையுடன் தற்போதைய சூழலில் நடத்த முடியுமாக இருந்தால் உலகளாவிய நுண்ணியல் ஆய்வாளர்களால் உறுதிப்படுத்தப்பட்ட பிரகாரம் " அடக்கம் செய்யப்படுகின்ற இறந்த உடலங்கள் மூலம் கொரோனா வைரஸ் தொற்று ஏற்படாது என்ற விஞ்ஞான ரீதியான உறுதிப்பாட்டினையும் , உலக சுகாதார நிறுவனத்தின் சடலங்களை அடக்கம் செய்வது தொடர்பான வழிகாட்டலையும் உதறித் தள்ளிவிட்டு, கொவிட் 19 வைரஸ் தொற்றினால் இறந்தவர்களது உடலங்கள் கட்டாயம் எரிக்கப்பட வேண்டும் என்ற வர்த்தமானி அறிவித்தலை மீளப்பெற வேண்டும். அந்தந்த சமயத்தினர், குறிப்பாக இஸ்லாமியர்கள் தமது உறவுகளுக்கான இறுதிக் கிரியைகளை உரிய வழிமுறைகளை பின்பற்றி முன்னெடுக்க இடமளிக்க வேண்டும் என்றுள்ளது. (ப)





# நாடு திரும்பினர் 6,500 பேர்

கொழும்பு, மே 24
வெளிநாடுகளில் நிர்க்கதிக்குள்ளாகியுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வரும் நடவடிக்கையின் ஊடாக இதுவரை 6 ஆயிரத்து 500 இலங்கையர்கள் அழைத்து வரப்பட்டுள்ளனர்.
இவ்வாறு நாட்டுக்கு அழைத்து வரப்பட்டவர்களில் 3 ஆயிரம் பேர் மாணவர்கள் என்று அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.
வெளிநாடுகளில் நிர்க்கதிக்குள்ளாகியுள்ள இலங்கையர்களை முறையாக நாட்டுக்கு அழைத்து வரும் நடவடிக்கையில் அனைவரும் பொறுமையுடன் செயற்படுமாறும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.
கொழும்பில் இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். (க)

# கபட அரசியல் நடத்தும் அரசு

## மக்கள் பாடம் புகட்டவேண்டும் என்கிறார் வேலுகுமார்

கொழும்பு, மே 24

5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை நிறுத்தி ஏழை மக்களின் அடிவயிற்றில் அடித்துள்ள ராஜபக்‌ஷ அரசு, தேர்தல் ஆணைக்குழு மீது அப்பட்டமாக பழிசுமத்திவிட்டு தாம் தப்பிக்கொள்வதற்கு முயற்சிக்கின்றது. நெருக்கடியான சூழ்நிலையில் கூட கபட அரசியல் நடத்தும் இந்த அரசுக்கு மக்கள் தக்கபாடம் புகட்ட வேண்டும்.

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற தேர்தல் வேட்பாளருமான வேலுகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கொரோனா வைரஸ் சீனாவில் தலைவிரித்தாடிய காலகட்டத்தில் பாதுகாப்பு முன்னேற்பாடுகளைச் செய்யுமாறு அரசிடம் நாம் சுட்டிக் காட்டியிருந்தோம். ஆனால், நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடத்துவதே அவர்களின் இலக்காக இருந்தது. எமது ஆலோசனைகளை ஏற்று அன்றே நடவடிக்கை எடுத்திருந்தால் எமது நாட்டுக்கு பெரும் பாதிப்புகள் ஏற்பட்டிருக்காது. சுகாதாரத் துறையினரும், பாதுகாப்புத் தரப்புகளும் சிறப்பாகச் செயற்பட்டதால், பெரும் பாதிப்பில் இருந்து நாம் மீண்டுள்ளோம். ஆனால், இந்த விடயத்திலும் அரசு தற்போது பெயர் போட்டுக்கொள்வதற்கு முயற்சிக்கின்றது.

குறிப்பாக தொடர் ஊரடங்கால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 5 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என அரசாங்கம் அறிவிப்புவிடுத்தது. இந்த விடயத்தில் அரசிடம் முறையான திட்டமிடல் இருக்கவில்லை. இதன் காரணமாகவே சுற்றுநிருபத்தை பலதடவைகள் திருந்தவேண்டிய நிலை ஏற்பட்டது. இறுதியில் எல்லாம் அரசியல் மயப்படுத்தப்பட்டது. 5 ஆயிரம் விவகாரத்தை அரசியல் மயப்படுத்தாமல், அரச அதிகாரிகள் ஊடாக முறையாக வழங்குமாறு தான் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இந்த விடயத்தை அப்படியே தலைகீழாக மாற்றி, தேர்தல் ஆணைக்குழு மீது பழிபோட்டு விட்டு, தனது இயலாமையை மூடிமறைத்து, மக்கள் மத்தியில் அனுதாபம் தேடுவதற்கு அரசு முயற்சிக்கின்றது. எனினும், அரசின் கபடநோக்கத்தை மக்கள் புரிந்துகொண்டுள்ளனர். என்றார். (சு-44)

# சகலருக்கும் 5,000 ரூபா

கொழும்பு, மே 24

கொரோனா வைரஸ் பரவலையடுத்து, பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கும் நடவடிக்கை தற்போது இடம்பெற்று வருகிறது என்று சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்ட சகலருக்கும் மே மாதத்துக்கான கொடுப்பனவு வழங்கப்படும் என்றும் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பந்துல திலகசிறி தெரிவித்துள்ளார். (சு)

# குருதிக்கொடை

யாழ்ப்பாணம், மே 24

யாழ். போதனா மருத்துவமனையில் குருதி வங்கியின் இருப்பை அதிகரிக்கும் நோக்குடன் 57 கொடையாளர்கள் குருதித்தானம் செய்துள்ளனர்.

சாவகச்சேரி கச்சாய் வீதி ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் கடந்த சனிக்கிழமை குருதித்தானம் செய்யப்பட்டது.

57 குருதிக்கொடையாளர்களுக்கும், சாவகச்சேரி பசுமை நிழல்கள் அமைப்பினரால் மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன. (சு-23)

# நால்வர் கைது

கிளிநொச்சி, மே 24

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்ட நால்வர் நேற்று கைதுசெய்யப்பட்டனர்.

சட்டவிரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒருவரும், கல்லாறு பகுதியில் சட்டத்துக்கு முரணான வகையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட சந்தேக நபர்கள் மூவரும் கைது செய்யப்பட்டனர். விசாரணை களின் பின்னர் அவர்கள் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-113)

# தத்தளிக்கும் மீனவர்களை நெருங்கியது "சமுத்திரா"

கொழும்பு, மே 24

அம்பான் சூறாவளியின் தாக்கம் காரணமாக இலங்கை மீனவர்களுடன் இந்தோனேஷிய கடல் எல்லையில் சிக்கியுள்ள படகுகளை மீட்பதற்காகச் சென்ற, இலங்கை கடற்படைக்குச் சொந்தமான சமுத்திரா படகு இந்தோனேஷிய கடல் எல்லையை அண்மித்துள்ளது.

இந்தப் பாதுகாப்பு படகு, எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்களுடன் இந்தோனேஷிய கடல் எல்லைக்குச் சென்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. பாதுகாப்பு படகு, இந்தோனேஷிய கடல் எல்லையில் சிக்கியுள்ள மீனவ படகுடன் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளதாக கடற்படையின் ஊடகப்பேச்சாளர் லெப்படினன் கமாண்டர் இசுரு சூரியபண்டார தெரிவித்தார்.

இதேவேளை குறித்த கடல் எல்லையில் 34 மீனவ படகுகள் சிக்கியுள்ளதுடன், அந்தப் படகுகளில் 180 க்கும் அதிகமான மீனவர்கள் நிர்க்கதியாகியுள்ளனர் என்று மீனவ திணைக்களத்தின் வானொலித் தொடர்புப் பேச்சாளர் பத்மசிறி திசேரா தெரிவித்துள்ளார். (ப)

# கொழும்பு யாசகர்களும் தனிமைப்படுத்தலில்

கொழும்பு, மே 24

புறக்கோட்டை பேருந்து தரிப்பிடம் உள்ளிட்ட பகுதிகளில் பொதுமக்களின் சுகாதார நலனுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்திய யாசகர்களை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கொழும்பு பிரதான நீதவான் லங்கா ஜயரத்ன மற்றும் கொழும்பு மேலதிக நீதிவான் பிரியந்த லியனகே ஆகியோர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளனர்.

கொழும்பு புறக்கோட்டை பேருந்து நிலையத்துக்கு அருகில் அநாவசியமான முறையில் நடமாடிய 60 யாசகர்கள் கைது செய்யப்பட்டிருந்த நிலையில், அவர்களை வீரவில தனிமைப்படுத்தல் முகாமுக்கு அனுப்பிவைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊரடங்கு காலப்பகுதியில் கைதுசெய்யப்பட்ட யாசகர்களை 14 நாள்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தும் செயற்பாட்டை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

உணவு உள்ளிட்ட தங்குமிட வசதிகளின்றி குறித்த யாசகர்கள் கொழும்பு புறக்கோட்டை உள்ளிட்ட பகுதிகளில் அநாவசியமாக நடமாடியதாக நீதிமன்றத்துக்கு பொலிஸார் அறிவித்துள்ளனர். இந்தக் காரணிகளைக் கருத்திற் கொண்ட நீதிவான்கள் குறித்த யாசகர்களை வீரவில தனிமைப்படுத்தல் முகாமுக்கு அனுப்பி வைக்குமாறு அறிவித்துள்ளனர். (ப)

# விபத்தில் காயமடைந்த இளைஞன் உயிரிழப்பு

முல்லைத்தீவு, மே 24

விபத்தில் காமடைந்த நிலையில் யாழ்.போதனா மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வந்த இளைஞன் உயிரிழந்தார். முள்ளியவளையைச் சேர்ந்த 23 வயதுடைய தனுசியன் என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார்.

கோடாலிக்கல் நெடுங்கேணி வீதியில் கடந்த வாரம் இரு சக்கர வாகனத்துடன் சென்ற இளைஞன், வேகக்கட்டுப்பாட்டை இழந்து மாட்டுடன் மோதி படுகாயமடைந்தார்.

இளைஞன் மாஞ்சோலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார். அங்கு சிகிச்சைபெற்று வந்த நிலையில் நேற்று சனிக்கிழமை உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இளைஞனின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (சு-19)

# பல இடங்களில் மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, மே 24



மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. ஊவா மாகாணத்திலும், அம்பாறை மாவட்டத்திலும் சில இடங்களில் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாடு முழுவதும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (சு)

# ஒத்திகை பார்த்தே இடம்பெற்றது தற்கொலைக் குண்டுத் தாக்குதல்

## குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தகவல்

கொழும்பு, மே 24

ஏப்ரல் 21 ஷங்ரிலா விடுதியில் தாக்குதல் நடத்திய குண்டுதாரிகள், அதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னர், அந்த விடுதிக்குச் சென்று தாக்குதல் ஒத்திகை பார்த்துள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது. ஏப்ரல் 21 தாக்குதல் குறித்து ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் இந்தத் தகவல் வெளிப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்குப் பொறுப்பான குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பிரதான பொலிஸ் பரிசோதகர் ஜே.எம். மஹிந்த ஜயசுந்தர நேற்று முன்தினம் சாட்சியமளித்தபோது இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

ஏப்ரல் 21 தாக்குதலுக்கு முன்னதாக ஏப்ரல் 17 ஆம் திகதி, ஷங்ரிலா விடுதி அறை ஒன்றை முன்பதிவு செய்வதற்காக மொஹமட் ஹம்ஷாட் என்ற நபர் அங்கு சென்றிருந்தாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. எனினும் சினமன் க்ராண்ட் ஹோட்டலில் குண்டுத் தாக்குதலை நடத்திய மொஹமட் இப்ராஹிம் இன்ஷாப் என்பவரே போலியான பெயரில் அங்கு அறையை முன்பதிவு செய்திருந்தாக விசாரணைகளில் கண்டறியப்பட்டதாக சாட்சியாளர் குறிப்பிட்டுள்ளார்.

ஷங்ரிலா விடுதியில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலை மேற்கொண்ட சஹ்ரான் ஹாஸீம் மற்றும் மொஹமட் இப்ராஹிம் இல்ஹாம் ஆகியோர், தாக்குதலுக்கு இரண்டு நாள்களுக்கு முன்னரே ஷங்ரிலா ஹோட்டலுக்குச் சென்றிருந்தாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் இருவரும், தாக்குதல் தொடர்பான ஒத்திகைக்கு அங்கு சென்றிருந்தாக விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரி குறிப்பிட்டுள்ளார். (ப)

# பெரமுனவுக்கு பெரும்பான்மை

## காமினி லொகுகே நம்பிக்கை

கொழும்பு, மே 24



பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கும் அதிகமான வாக்குகளைப்பெறும். ஜனாதிபதித் தேர்தலில் பெரும்பான்மை மக்கள் வழங்கிய ஆதரவில் எவ்வித மாற்றமும் கிடையாது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொகுகே தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுத்தேர்தல் எப்போது இடம்பெறும் என்பதே மக்களின் பிரதான எதிர்பார்ப்பாக காணப்படுகின்றது. கொரோனா வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் பாதுகாப்பான முறையில் வாழ்வதற்கு மக்கள் பழகிக் கொண்டார்கள். பொதுத்தேர்தலை தற்போது பாதுகாப்பான முறையில் நடத்தமுடியும் என்ற நிலைப்பாட்டில் அரசாங்கம் உள்ளது பொதுத் தேர்தலில் வெற்றிபெறுவதற்கு பொதுஜன பெரமுன புதிதாக மார்க்கங்களை உருவாக்க வேண்டிய தேவை கிடையாது. பொதுஜன பெரமுன மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கும் அதிகமான வாக்குகளைப் பெறும். - என்றார். (ப)

# மணமக்களுக்கு முத்தமிடாது திருமணங்களை நடத்தலாம்

கொழும்பு, மே 24

திருமண வரவேற்பு வைபவங்களை நடத்துவதற்கான தடையை இலங்கை அரசாங்கம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நீக்கியுள்ளது. ஆனால் கைகுலுக்கல், முத்தமிடுவதற்கு தடையும் விதிக்கப்பட்டுள் ளது.

இலங்கையில் திருமண வைபவங்கள் பல நாள்களுக்கு நீடிப்பது வழக்கம். நூற்றுக்கணக்கான விருந்தினர்கள் கலந்துகொள்வதுண்டு. கொரோனா தொற்றுப் பரவலையடுத்து திருமண வரவேற்பு வைபவங்களுக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. மீண்டும் இயல்புநிலையை ஏற்படுத்தும் திட்டத்தின் கீழ் இத்தடை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முதல் நீக்கப்பட்டுள்ளது. ஆனால் சுகாதார அமைச்சின் புதிய வழிகாட்டல்களின்படி திருமண வரவேற்பு வைபவங்களில் அதிகபட்சம் 100 விருந்தினர்கள் மாத்திரமே பங்குபற்றலாம். மணமக்கள் உட்பட அனைவரும் முகக் கவசம் அணிந்திருப்பதுடன், விருந்தினர்கள் ஒவ்வொருவருக்கும் இடையில் ஒரு மீற்றர் (3 அடி) இடைவெளி பேணப்பட வேண்டும். விருந்தினர்கள், முத்தமிடவோ, கைகுலுக்கவோ அனுமதிக்கப்படக் கூடாது. ஒருவரையொருவர் எந்தவிதமாகவும் தொட்டுக்கொள்ளாமலேயே வாழ்த்துகள் தெரிவிக்கப்பட வேண்டும் என சுகாதார அமைச்சின் விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ப)

# குண்டுத் தாக்குதல் விசாரணையை சிலர் சீர்குலைக்க முற்படுகின்றனர்

## கொழும்பு பேராயர் குற்றச்சாட்டு

கொழும்பு, மே 24

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் முறையாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது. எனினும் சிலர் இதனைச் சீர்குலைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன என்று கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கொழும்பில் நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அதிகாரமுடைய ஸ்தானத்திலிருந்து கொண்டு இவ்வாறு செயற்படுபவர்கள் அவர்களுக்கு எவ்வாறு வாழ்வதற்கான உரிமை இருக்கிறதோ அதே போன்றே உயிர்த்த ஞாயிறு தினத்தன்று உயிரிழந்தவர்களுக்கும் வாழ்வதற்கான உரிமை இருந்தது. ஆனால் அதனைப் பறித்து தற்போது மனித உரிமை மீறல் பற்றி அவ்வாறானவர்கள் பேசுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

எனவே உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுக்கொடுக்க முற்படும் அதிகாரிகளை பழிவாங்க முற்படக்கூடாது என்று பேராயர் தெரிவித்துள்ளார். (ப)

# குண்டுகளுடன் ஒருவர் கைது

கொழும்பு, மே 24

துப்பாக்கி மற்றும் வெடிகுண்டுகளை வைத்திருந்தார் என்ற சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். அத்திடிய போசெவன பகுதியில் வைத்தே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கல்கிசை பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய குறித்த நபர் கைதுசெய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 67 வயதுடைய குறித்த நபரிடருந்து 4 வெடிகுண்டுகள் மீட்கப்பட்டன என்று தெரிவித்த பொலிஸார் அவரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் கூறினர். (ப)

# 276 பேர் நாடு திரும்பினர்

கொழும்பு, மே 24

கொவிட் 19 தொற்றுக் காரணமாக பங்களாதேஷிலிருந்து நாடு திரும்ப முடியாமல் சிக்கியிருந்த, 276 இலங்கையர்கள் இன்று அதிகாலை விசேட விமானம் மூலம் நாட்டுக்கு அழைத்துவரப்பட்டனர்.

ஸ்ரீலங்கன் விமானசேவைக்குச் சொந்தமான விசேட விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த அவர்கள், விமான நிலையத்தில் வைத்து கிருமித்தொற்று நீக்கத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். பின்னர், அவர்கள் அனைவரும் தனிமைப்படுத்தல் மையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர் என விமான நிலையச் செய்திகள் தெரிவித்தன. (ப)

# அரிசியை பதுக்கினால் சட்டம் பாயும்

கொழும்பு, மே 24

அரசி மூடைகளை மறைத்து வைத்திருக்கும் நெல் விற்பனை அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

சந்தையில் அரிசி பற்றாக்குறை நிலவுவதைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வந்த விசாரணைகளை அடுத்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கொரேரனா அச்சுறுத்தல் காணப்பட்டாலும் பலர் அரிசி வாங்குவதற்காக இந்த நாள்களில் முயற்சித்து வந்ததாக கூறப்பட்டுள்ளது. (ப)

# தேர்தல் நடத்த எதிர்ப்பில்லை

## சஜித் அணி கூறுகின்றது

கொழும்பு, மே 24

சுகாதாரப்பிரிவும், தேர்தல்கள் ஆணையகமும் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு அனுமதி வழங்கினால் தேர்தலை நடத்துவதற்கு நாங்களும் தயாராகவே இருக்கின்றோம் என்று தெரிவித்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹெட்வட்குணசேகர, கொரோனா வைரஸ் பரவலால் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையின் மத்தியில் தேர்தலை நடத்துவதற்கே நாங்கள் எதிர்ப்பு தெரிவித்து வந்தோம் என்றும் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

தற்போதைய அரசாங்கம் நல்லாட்சி அரசாங்கத்தின் மீது போலிக் குற்றச்சாட்டுகளை முன்வைத்து ஆட்சியைக் கைப்பற்றியிருந்தாலும், அவர்களை நம்பி வாக்களித்த மக்களை ஏமாற்றியுள்ளது. ஆட்சியைப் பொறுப்பேற்றவுடனே குழப்பத்தை ஏற்படுத்திக் கொண்டவர்கள் தற்போது கொரோனா வைரஸ் பரவலைக் காண்பித்து தப்பிக் கொள்ள முயற்சிக்கின்றனர். ராஜபக்சக்களின் ஆட்சிக்காலத்தில் இவர்களிடம் எந்த சாதாரண சலுகைகளையும் பெற்றுக்கொள்ளமுடியாது என்பதை மக்கள் தற்போது நன்கு உணர்ந்துள்ளனர். விவசாயிகளை போசிப்பதாக குறிப்பிட்டு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு வரி அறவிட்டு வருகின்றனர். பொதுத் தேர்தலை நடத்துவதற்கு நாங்கள் எப்போதும் தயாராகவே இருக்கின்றோம். கொரோனா நெருக்கடிக்கு மத்தியிலேயே தேர்தலை நடத்தவேண்டாம் என்று அறிவித்தோம். சுகாதாரப்பிரிவும், தேர்தல்கள் ஆணையகமும் தேர்தலை நடத்த அனுமதித்தால் நாங்களும் தேர்தலில் போட்டியிடுவதற்கு தயாராகவே இருக்கின்றோம். ராஜபக்சக்களின் ஆறுமாத ஆட்சிகாலத்தில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதே எமது எண்ணம். அதனால் தேர்தலை நடத்துவதற்கு நாங்கள் எதிர்ப்பு தெரிவிக்க மாட்டோம் - என்றார். (ப)

# ரின் மீன் தொழிற்சாலையை மீண்டும் இயக்கக் கோரிக்கை

மன்னார், மே 24

பேசாலையில் இருக்கும் ரின் மீன் தொழிற்சாலையை மீண்டும் இயக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பிரதேச மக்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

சுமார் கடந்த முப்பது வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக குறித்த ரின் மீன் தொழிற்சாலையின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டன. இந்நிலையில் இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான குறித்த ரின் மீன் தொழிற்சாலையை மீளச் செயற்படுத்துவதன் ஊடாக சுமார் நூற்றுக்கு மேற்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்த முடியும் என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சர் இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான ஐஸ் தொழிற்சாலைக்கான கண்காணிப்புப் பயணமொன்றை இன்று மேற்கொண்டிருந்தார். இதன்போதே பிரதேச மக்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர். சம்மந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு குறித்த தொழிற்சாலையை மீளச் செயற்படுத்துவது தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்குமாறு அமைச்சர் அறிவுறுத்தினார் என்று தெரிவிக்கப்பட்டது. (ப-20)





# வடக்கு மக்களை துன்புறுத்தாதீர்!

## அரசிடம் இராதாகிருஷ்ணன் கோரிக்கை

கொழும்பு, மே 24

இராணுவத்தின் ஊடாக வடக்கு மக்களின் சொத்து விவரங்களைத் திரட்டும் நடவடிக்கையை அரசு உடனடியாகக் கைவிடவேண்டும் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான வீ. இராதாகிருஷ்ணன் வலியுறுத்தினார்.

நுவரெலியாவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

வடக்கில் தனிநபருக்கு எவ்வளவு காணி, சொத்துகள் இருக்கின்றன போன்ற தனிப்பட்ட தகவல்கள் திரட்டப்பட்டுவருவதாகத் தகவல் கிடைத்தது. இது நியாயமற்ற செயலாகும்.

வடக்கு, கிழக்கில் வாழும் மக்களே போரால் பெரிதும் பாதிக்கப்பட்டனர். நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே அவர்கள் தற்போது மீண்டுவருகின்றனர். இந்நிலையில் இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுப்பது மரத்தில் இருந்து கீழே விழுந்தவரை மாடு முட்டுவது போன்றதாகவே அமையும்.

எனவே, மக்களைத் துன்புறுத்தும் வகையிலான செயலை அரசாங்கம் நிறுத்த வேண்டும். இதற்காக நாமும் குரல் கொடுப்போம். என்றார்.(க44)

# கொக்குத்தொடுவாயில் அத்துமீறும் மீனவர்கள்

## பிரதேச மீனவர்கள் விசனம்

முல்லைத்தீவு,மே 24

முல்லைத்தீவு மாவட்டம் கொக்குத்தொடுவாயில் புத்தளம் உடப்புப் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள், சிலரின் ஆதரவுடன் கடற்றொழிலுக்காக வந்துள்ளனர் என்று பிரதேச மீனவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கொக்குத்தொடுவாய் வடக்கு அம்மன் கோவில் துறையில் உடப்பைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் பலர் கடற்றொழில் நடவடிக்கைக்கு வருகைதந்துள்ளனர். இதனால் பிரதேச கடற்றொழிலாளர்களின் நடவடிக்கை பாதிக்கப்பட்டுள்ளது.

உடப்பைச் சேர்ந்த 30 க்கும் மேற்பட்டவர்கள் 12 தெப்பங்களுடனும், 5 படகுகளுடனும் வருகை தந்து வாடிகள் அமைத்து தொழில் செய்து வருகின்றனர். இவர்களுக்கு கொக்குத்தொடுவாயில் உள்ள முத்துமாரி அம்மன் கிராமிய கடற்றொழில் கூட்டுறவுச் சங்கத்தினரின் ஆதரவுடன் ஒரு தெற்பத்துக்கு 5ஆயிரம் ரூபாவும், படகு ஒன்றுக்கு பத்தாயிரம் ரூபாவும் பணம்பெற்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கிராமிய கடற்தொழில் அமைப்பினரின் இவ்வாறான நடவடிக்கையால் சொந்தக் கிராமத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். வெளிமாவட்ட மீனவர்களை அனுமதிப்பது சட்ட விரோதமான செயற்பாடு. பணத்துக்காக கிராமிய கடற்றொழில் அமைப்பின் தலைவர், செயலாளர்கள் விலைபோயுள்ளனர் என்றும் கிராமிய மீனவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (க-19)

# 5 லட்சம் பேரின் வேலைக்கு ஆபத்து



## எச்சரிக்கின்றார் ரணில்

கொழும்பு, மே 24

கொரோனா வைரஸின் தாக்கத்தால் முச்சக்கர வண்டி ஓட்டுநர்கள் முதல் உயர் மட்ட அதிகாரிகள் வரையிலான 5 லட்சம் பேர் வேலை இழக்க நேரிடும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது

கடந்த வாரம் அரசாங்கம், பொருளாதார மந்தநிலையின்போது 200 பில்லியன் ரூபாயினை அச்சிட்டு பணவீக்கத்தை அதிகரித்துள்ளது. இந்த நெருக்கடிக்கு அரசால் வழங்கப்படும் பதில் போதுமானதாக இல்லை. நிலைமை தொடர்பான பொருளாதார மதிப்பீட்டை வழங்க வேண்டும்.

அதிக வேலைகள் மற்றும் வாழ்வாதாரங்கள் இழக்கப்படுவதற்கு முன்னர், நிலைமை தொடர்பான பொருளாதார மதிப்பீடு, நம்பகமான பொருளாதார தொகுப்பு மற்றும் வேலைவாய்ப்பு, கட்டுமானத் துறைகளுக்கு அவசர நிவாரணம் ஆகியவற்றை அறிவிக்க வேண்டும்-என்றார்.(எ)

# ரஷ்யாவுக்கான தூதுவராக எம்.டீ லமாவங்ஷ

கொழும்பு, மே 24

ரஷ்யாவுக்கான ஸ்ரீலங்காவின் புதிய தூதுவராக பேராசிரியர் எம்.டீ லமாவங்ஷ நியமிக்கப்பட்டுள்ளார். புதிய தூதுவர் பிரதமர் மகிந்த ராஜபக்சவுடன் நேற்று கலந்துரையாடலை மேற்கொண்டுள்ளார்.

எதிர்வரும் நாள்களில் புதிய தூதுவர் தமது கடமைகளைப் பொறுப்பேற்பதற்காக ரஷ்யா புறப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. எம்.டீ லமாவங்ஷ பேராதனை பல்கலைக்கழகத்தின் முன்னாள் மருத்துவ பீட உபவேந்தர் என்பது குறிப்பிடத்தக்கது. ரஷ்யாவில் கொரோனா தாக்கம் அதிகரித்துள்ளதால் அவரது பயணங்கள் தாமதம் ஆகலாமென பிரதமரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ப)

# போர் குறித்து புத்தகம் எழுத தயாராகின்றார் பொன்சேகா

## தலைவர் பிரபாகரனையும் புகழ்கிறார்

கொழும்பு, மே 24

இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டுப் போர் தொடர்பில் புத்தகம் எழுதவுள்ளேன். இன்னும் ஓரிரு வருடங்களுக்குள் அந்தப் பணியைச் செய்து முடிக்க உத்தேசித்துள்ளேன்.

இவ்வாறு இறுதிப்போரை வழிநடத்திய முன்னாள் இராணுவத் தளபதியான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பொட்டம்மான் உட்பட புலிகள் அமைப்பின் எந்தவொரு தளபதியும் இறுதிக்கட்டப் போரின்போது தப்பிச்செல்லவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சரத் பொன்சேகா மேலும் தெரிவித்ததாவது;

போரின் இறுதிகட்டம் வரை பிரபாகரன் களத்தில் இருந்தார். தீவிரவாதியாக இருந்தாலும் ஒரு தலைவராக இறுதி வரை அவர் போரிட்டதையிட்டு ஒரு இராணுவ அதிகாரியாக நான் அவருக்கு மதிப்பளிக்கின்றேன். போரின்போது பிரபாகரனை உயிருடன் பிடிப்பதற்கு முயற்சிக்கவில்லை. கடைசிவரை போரிட்டு அவரை கொன்றதே சரியான செயல் எனக் கருதுகின்றேன். ஏனெனில் கே.பி., கருணா அம்மான் போன்றோர் தற்போது சுதந்திரமாக அரசியல் செய்கின்றனர். கருணா அம்மான் யாருடன் அரசியல் செய்கிறார் என்பது மக்களுக்குத் தெரியும். பிரபாகரனையும் உயிருடன் பிடித்திருந்தால், போர் முடிவடைந்திருந்தாலும் அவரும் பிரபல நபராகியிருப்பார். வடக்கையும், கிழக்கையும் ஆளும் நிலையை அரசியல் ரீதியில் உருவாக்கியிருப்பார். அதற்கு அப்போதைய அரசியல்வாதிகளும் அனுமதி வழங்கியிருக்ககூடும். எனவே



பிரபாகரனை கொன்றதே சரியென நினைக்கிறேன். அவர் உயிருடன் வேண்டும் என எங்கிருந்தும் உத்தரவு வரவில்லை. பிரபாகரன் இராணுவத்தின் பலவீனத்தை தெரிந்துகொண்டார். எம்மை விடவும் குறைந்த ஆளணிப் பலம் இருந்தும் தாக்குதல் நடத்தினர். பிரபாகரன் அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர். சிறிய வாய்ப்பு கிடைத்தால்கூட தாக்குதல் நடத்தி இலக்கை நோக்கி நகர முயற்சிப்பார். தனக்கு எதிரான அரசியல்வாதிகளைக் கொன்றொழித்தார். தற்கொலைப் படையைக்கூட உருவாக்கினார்.

புலிகளே போரை ஆரம்பிப்பார்கள். அவர்கள் தாக்குதல் நடத்திய பின்னரே முகாம்களை பாதுகாப்பதற்கு பதிலடி கொடுக்கப்பட்டு வந்தது. இந்நிலையில் நான் போர் வியூகத்தை மாற்றியமைத்தேன். வீதிகளில் பயணிக்காமல் கஷ்டமாக இருந்தாலும் இராணுவத்தை காட்டுக்குள் குழுக்களாகக் களமிறக்கினேன். புலிகளின் பலமான பகுதிகளில் அதிரடியாக தாக்குதல்கள் நடத்தப்பட்டன. புலிகளின் பகுதிகளை கைப்பற்றுவது எனது இலக்காக இருக்கவில்லை. அவர்களை ஒழிக்கவேண்டும். அவ்வாறு செய்யும்போது புலிகள் தாமாகவே பின்நோக்கிச் சென்றனர். புலிகளின் தளபதிகளுள் ஒருவரான பால்ராஜ் மாரடைப்பால் இறந்தார் என அவ்வமைப்பினர் கூறினாலும், பரந்தனில் இடம்பெற்ற தாக்குதலொன்றின்போதே அவர் கொல்லப்பட்டிருக்கலாம். போரின் இறுதிகட்டத்தில் புலிகள் தப்பியோடமுடியாத வகையில் கடல் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது. அவர்கள் தப்பியோட முயற்சித்தபோது இராணுவத்தினரால் தாக்குதல் நடத்தப்பட்டது. இதன்போது பொட்டு அம்மான், தற்கொலைக் குண்டை வெடிக்கச் செய்து உயிரிழந்தார் என கே.பி. தகவல் வெளியிட்டிருந்தார். இந்த விடயத்தை ஊடகங்கள் வாயிலாகப் பார்த்தேன். புலிகள் அமைப்பின் எந்தவொரு தளபதிகளும் தப்பிச்செல்லவில்லை.

போரை நிறுத்தும் நிலைப்பாட்டில் இந்தியா இருக்கவில்லை. அதேபோல் போருக்கு உதவிகளை வழங்கவும் இல்லை. பாகிஸ்தான் ஒத்துழைப்பு வழங்கியது. சீனாவில் இருந்து ஆயுதங்கள் எடுத்துவரப்பட்டன. ஆனால், மேற்குலக நாடுகள் போரை எதிர்த்தன. அதாவது போரை எவராலும் முடிவுக்கு கொண்டுவரமுடியாது, இறுதியில் மனித உயிரிழப்புகள் தான் ஏற்படும் என கருதியதாலேயே அந்நாடுகள் எதிர்த்தன என நினைக்கின்றேன். அதேபோல் கடைசிநேரத்தில் கூட போர்நிறுத்த உடன்படிக்கையை செய்து கொள்வது சம்பந்தமாக சில மேற்குலக நாடுகளின் தூதுவர்கள் பேச்சு நடத்தினர். அதேவேளை, போர் முடிவடைந்த பின்னர் புத்தகம் எழுதுவதற்கு எனக்கு நேரம் இருக்கவில்லை. தற்போது எதிரணியில் இருக்கின்றேன். இனி நேரம் கிடைக்கும் என நம்புகின்றேன். புத்தகம் எழுதுவேன். ஓரிரு வருடங்களில் முடிக்கலாம். பல அனுபங்களையும், தகவல்களையும் பகிரக்கூடியதாக இருக்கும் - என்றார். (ப-44)

# ஆலயக் காணியை அபகரிக்க முயற்சி

## தட்டிக்கேட்கச் சென்றவர் மீது தாக்குதல்

மன்னார், மே 24

ஆலயக் காணியை அபகரிக்க முயற்சித்த நபரை, தடுத்து நிறுத்தச் சென்ற நிர்வாகத்தினர் மீது கொலைவெறித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இந்தச் சம்பவம் ஊரடங்கு அமுலில் உள்ள மன்னார் நானாட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட மடுக்கரைக் கிராமத்தில் இன்று காலை நடந்துள்ளது.

மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்துக்கு வழங்கப்பட்ட காணியை தனிநபர் ஒருவர் அடாத்தாகப் பிடித்து வேலியிடும் நடவடிக்கையில் இன்று காலை ஈடுபட்டுள்ளார். அதனை கேட்கச்சென்ற ஆலயத்தின் செயலாளர் மீது, கண்மூடித்தனமான கொலைவெறித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. தாக்குதலுக்கு இலக்கான ஆலயச் செயலாளர் முருங்கன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டைப் பதிவுசெய்த பின்னர் முருங்கன் மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகிறார்.

தாக்குதலுக்கு இலக்கான ஆலயச் செயலாளர் தெரிவித்ததாவது,

மடுக்கரை ஆற்றங்கரையோரம் அமைந்திருக்கும் மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்துக்கு ஆரம்பத்தில் காணி வழங்கப்பட்டது. அதன்பின்னர் 2018 ஆம் ஆண்டு நானாட்டான் பிரதேச செயலாளரால் ஒரு ஏக்கர் காணி வழங்கப்பட்டது. அதை அபிவிருத்தி செய்வதற்கு ஆலயத்தில் நிதி வசதி இல்லாமல் இருந்தது. தற்போது கொரோனா ஊரடங்கைப் பயன்படுத்தி தனிநபர் ஒருவர் தனது பிள்ளைகளுடன் ஆலயக் காணியைப் பிடித்து வேலியிட்டு வருகிறார். இதனை கேட்டச் சென்ற என்மீது தடிகளால் கொலைவெறித் தாக்குதல் நடத்தினர். அதிகாரிகள் இதற்கான நடவடிக்கையை உரிய முறையில் எடுத்து ஆலயத்துக்கான காணியை மீட்டுத் தர வேண்டும்- என்றார். (க-213)

# பிறந்தநாள் கொண்டாடியோர் தனிமைப்படுத்தலில்

திருகோணமலை, மே 24

திருகோணமலை, அலஸ்தோட்டம் பகுதியிலுள்ள பிரபல விடுதியொன்றில் பிறந்தநாள் கொண்டாடியவர்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக, உப்புவெளி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

தனிமைப்படுத்தல் மற்றும் தொற்றுநோய்களைக் கட்டுப்படுத்தல் சட்டத்தை மீறி பிரபல விடுதி ஒன்றில் பிறந்தநாள் கொண்டாடிய குற்றச்சாட்டின் பேரில் பிரபல விடுதி மண்டப உரிமையாளர் மற்றும் பிறந்தநாள் கொண்டாடியவர்களை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தனிமைப்படுத்தி உள்ளதாகவும் அவ்வலுவலகம் தெரிவித்துள்ளது. (ப)

# கோத்தாபயவைத் தேர்தலில் நிறுத்தியது ரணில் அணியே

## சம்பிக்க பரபரப்பு தகவல்



கொழும்பு, மே 24

ஊழல், மோசடி விசாரணைகளில் இருந்து ராஜபக்ஷ பரம்பரையை ரணில் அணியே காப்பாற்றியது. உண்மையான ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்திக்குள் தான் இருக்கின்றது. ரணில் தரப்பு என்பது அரசின் பங்காளியாகும் என்று முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களில் 90 வீதமானோர் ஐக்கிய மக்கள் சக்தியின் பின்னால் அணிதிரண்டுள்ளனர். அக்கட்சியிலுள்ள எஞ்சிய ரணில் தரப்பைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஆளுங்கட்சிக்குச் சார்பாக அரச பங்காளிகளாகச் செயற்பட்டு வருகின்றனர்.

தற்போதைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுக்கு அன்று கடவுச்சீட்டு, தேசிய அடையாள அட்டை ஆகியவற்றைச் செய்து கொடுத்து அவரை ஜனாதிபதி தேர்தலுக்கு ரணில் தரப்பே கொண்டுவந்தது. அதுமட்டுமல்ல ஊழல், மோசடி விசாரணைகளில் இருந்து ராஜபக்ஷ பரம்பரையையும் காப்பாற்றியது. எனவே, அந்த அணியில் தான் அரசியல் 'டீல்' காரர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

ஐக்கிய மக்கள் சக்திதான் பரந்துபட்ட தேசிய அரசியல் இயக்கமாகும். தேசப்பற்றாளர்கள் எல்லாம் எம்முடன் தான் இருக்கின்றனர். குடும்ப ஆதிக்கத்துக்கு எதிராகப் போராடக்கூடிய வல்லமையும் எமக்கே இருக்கின்றது. தேர்தல் முடிவுகள் வெளிவந்த பின்னர் இதனைத் தெளிவாக அறியலாம்- என்றார். (க-44)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 24.05.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.